# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL  Tamil Monthly  தமிழ் மாத இதழ்

| | | | |
|---|---|---|---|
| மலர் : 6 | இதழ்: 8 | மே : 2022 | ரூ.20/- |
| Volume: 6 | Issue: 8 | May : 2022 | Rs.20/- |






SHRI MAHA MERU MANDALI TRUST
Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14

# திருத்தேர் வெள்ளோட்டம்

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ பிலவ வருடம் பங்குனி மாதம் 4-ந் தேதி 18.03.2022 வெள்ளிக்கிழமை பால்குண சுத்த பௌர்ணமி, உத்தர நக்ஷத்ரம் ஸித்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் சென்னை – 88, கோட்டூர் **ஸ்ரீ மஹா மேரு மண்டலியினரால் நிர்மாணிக்கப்பட்ட புதிய திருத்தேர் வெள்ளோட்டம்** செய்யப்பட்டு சேலம் மாவட்டம், தலைவசால் வட்டம் ஆறகழூர் கிராமத்தில் அமைந்துள்ள **அருள்மிகு பெரியநாயகி உடனுறை அருள்மிகு காமநாதீஸ்வரர் ஆலயத்திற்கு** சமர்ப்பிக்கப்பட்டது. விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.







# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 32

**யஸ்மிந் ஸர்வாணி பூதாநி ஆத்மை வா பூத் விஜாநத:|**
**தத்ர கோ மோஹ : க : சோக : ஏகத்வமனுபச்யத : ||**

**- ஈசாவாஸ்ய உபநிஷதம்**

*தத்துவத்தைச் சரியாக அறிந்தவன் அனைத்து பூதங்களும் அதாவது பொருள்களும், ஆத்மாவே என்று அறிந்து, எல்லாம் ஒன்றே என்னும் உண்மையை அறிகிறான். இவனுக்கு சோக மோஹங்கள் கிடையாது.*

*சோக மோஹங்களைத் தாண்டுவதே இந்த மனிதப் பிறவியின் குறிக்கோள். அனைத்துப் பொருள்களும் ஆத்மாவே என்றுணர்வதே ஸர்வாத்மபாவம். இதை உணர்வதே ஆத்மஜ்ஞானத்தின் ரஹஸ்யம்.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 6 இதழ்: 8

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 9025864231

# புத்தகத்தின் உள்ளே

| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 6 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| வைகாசி மாத விசேஷங்கள் | 11 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| ஸ்ரீமத் பாகவதம் | 14 |
| ஔவையார் | 16 |
| ஸ்ரீ ஆதிசங்கரர் | 17 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 19 |
| தர்மத்தின் குரல் | 20 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் வேதவாக்கு | 21 |
| குழந்தைகள் பகுதி | 22 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 24 |
| சாதனை பறவைகள் | 30 |
| உறவுகள் தொடர்கதை | 37 |
| பசு சர்வரோக நிவாரணி | 42 |
| தென் கயிலாயங்கள் | 46 |

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# வேதபாரதி செய்திகள்

**சந்தாதாரர்களுக்கு ஓர் வேண்டுகோளும், அறிவிப்பும்**

*ஒரு ஆண்டு சந்தா ரூ.200/-*

*10 ஆண்டு சந்தா ரூ,1500/-*

*2021 மே மாதம் ஓர் ஆண்டு சந்தா செலுத்தியவர்களின் சந்தா காலம் 2022 ஏப்ரல் மாதத்துடன் முடிவடைந்துவிட்டது. இந்த ஒரு மாதம் (மே 2022) அவர்களுக்கு புத்தகம் இலவசமாக அனுப்பபப்பட்டுள்ளது. 31.05.2022 க்குள் அவர்கள் சந்தா தொகையை செலுத்தி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். புதுப்பிக்கவில்லையெனில் 2022 ஜூன் மாதம் முதல் அவர்களுக்கு "வேதபாரதி செய்திகள்" புத்தகம் அனுப்பி வைக்கப்பட மாட்டாது.*

*சந்தாவை புதுப்பித்துக் கொள்பவர்களும், புதியதாக சந்தா செலுத்த விரும்புகிறவர்களும், சந்தா தொகையை காசோலை அல்லது* DD *மூலம் செலுத்தலாம். காசோலை அல்லது* DD *யை* **VEDABHARATHI** *என்ற பெயரில் எடுத்து கீழ்க்கண்ட நிர்வாக முகவரிக்கு தங்களுடைய முழுவிலாசத்துடனும் கைபேசி எண்ணுடனும் அனுப்ப வேண்டும்.*

**"வேதபாரதி"**

*எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு,*

*பேபி நகர், வேளச்சேரி, சென்னை – 600 042.*

*சந்தா தொகையையோ, நன்கொடையையோ வங்கி மூலம் வழங்கிட விவரங்கள்.*

**VEDABHARATHI**

**CITY UNION BANK,VELACHERY BRANCH**

**A/C NO. 510909010005286 | IFSC : CIUB 0000262**

Ph 94434 95950 | Email: vedabharathichennai@gmail.com

Website: www.vedabharathi.org

# ஒரு நிமிடம் உங்களோடு...

## 46. வினயம் (அடக்கம்)

**“வினயம்”** ஒரு அழகான சொல். **“வினயம்”** என்றால் **“பணிவு”, “பவ்யம்”, “செருக்கின்மை”** என்று பல அர்த்தங்கள் உள்ளன. **“வித்தைக்கு அழகு வினயம்”** என்பார்கள். பலவற்றை கற்று அறிந்திருந்தாலும் தலைக்கணம் இல்லாமல் இருப்பது **“வினயம்”.**

நம் முன்னோர்களில் எத்தனையோ பேர் வினயத்திற்கு உதாரணமாக திகழ்ந்துள்ளார்கள். உலகத்திலேயே மஹா சக்தியை பெற்றிருந்தவர் கவிஞர் **“காளிதாசன்”.** ஒரு முறை யாரெல்லாம் கவிகள் சொல்லுங்கள் என்றார்களாம். முதலில் வந்த பெயர் **“காளிதாசன்”.** அதன் பிறகு யாருடைய பெயரும் வரவில்லையாம். அப்பேர்பட்ட மஹாகவி **“ரகு வம்சம்”** என்ற கிரந்தம் எழுத ஆரம்பித்தாராம். அவருக்கு அதை எழுதும் தகுதி இருந்தும்கூட அவர் சொன்ன வார்த்தை என்ன தெரியுமா? **“இதை எழுதக்கூடிய யோக்யதை எனக்கு இல்லை’.** அவரைப்போல் நமக்கும் வினயம் வேண்டும். அந்த வினயம் இல்லாவிட்டால் நாம் என்ன படிப்பு படித்தாலும், எவ்வளவு படித்தாலும் அந்த படிப்பு பயனில்லாதது.

**“பரத்வாஜ மஹரிஷி’** எல்லா வேதங்களையும் படித்து முடிக்க வேண்டும் ஆரம்பித்தாராம். ஒரு ஆயுள் முழுக்கப் படித்தாராம் முடியவில்லை. அடுத்த ஆயுளிலும் படித்தார் முடியவில்லை. மூன்றாவது ஆயுளில் 90 வயது முடிந்ததும் படித்துக்கொண்டே இருந்தார். அப்போதும் முடியவில்லை. அப்போது அவர் முன் தோன்றிய இந்திரன் மஹரிஷியிடம் “இன்னொரு ஆயுசு கொடுத்தால் என்ன பண்ணுவீர்கள்?” என்று

கேட்டான். அதற்கு பரத்வாஜர் அனைத்து வேதங்களையும் படித்து முடித்துவிடுவேன் என்றாராம். அப்போது இந்திரன் மூன்று மலைகளைக் காண்பித்து ஒவ்வொரு மலையிலிருந்தும் ஒரு பிடி மண் எடுத்து காட்டி, நீ படிக்க வேண்டியது இந்த மலைகள் அளவு நீ படித்தது இந்த மூன்று பிடி மண் அளவுதான். எப்போது படித்து முடிப்பாய்? என்றாராம்.

**“கற்றது கைமண் அளவு கல்லாதது உலக அளவு’**

**’நஹி ஸர்வ ஸர்வ ஜானாதி’** = எல்லோருக்கும் எல்லாம் தெரியாது. “நான் ஏதோ கொஞ்சம் தெரிந்து கொண்டு இருக்கிறேன். நான் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் இன்னும் ஏராளம் இருக்கின்றன என்ற மனோபாவம் எல்லோருக்கும் வரவேண்டும்.

**பணியுமாம் என்றும் பெருமை சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து. (குறள் 978)**

பொருள் : பெருமையுடைவர் எப்போதும் பிறரைப் பணிந்து நடப்பர்; சிறுமையுடையோர் தம்மைத் தாமே வியந்து புகழ்வார்.

**D. சூரியநாராயணன்**


## பெண்மையைப் போற்றுவோம்!

7வது வகுப்பிற்கு மேல் படிக்கும் பெண் குழந்தைகளுக்கு பிரதி மாதம் தற்காப்பு பயிற்சி வகுப்புகள் நடந்து வருகிறது. உங்கள் குழந்தைகளை சேர்த்து பயன் பெறுங்கள்.

தொடர்புக்கு : **9443495950**

# அட்டைப்பட விளக்கம்

## ஸ்ரீ பரசுராமர் ஜயந்தி



*ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அவதாரங்கள் மொத்தம் 24 என்று கூறுகிறது. அவற்றில் முதன்மையானதாக கூறப்படுவது* **"தசாவதாரங்கள்'.** *அதாவது 10 அவதாரங்கள். அவற்றில் பகவான் இப்பூவுலகில் பல்வேறு சூழ்நிலைகளில் இதுவரையிலும் எடுத்தது ஒன்பது அவதாரங்கள். இனி எடுக்கப்போகும் ஒரு அவதாரம்* **"கல்கி"** *அவதாரம். இதில் ஆறாவதாக எடுத்த அவதாரம் தான்* **"பரசுராம அவதாரம்**".

*த்ரேதா யுகத்தில் சப்தரிஷிகளில் ஒருவரான ஜமதக்னி மஹரிஷியும் அவரது பத்தினி ரேணுகாதேவியும் சிவனை நோக்கி தவம் செய்தார்கள். அந்த தவத்தின் பயனாக ஜமதக்னி தம்பதியருக்கு ஐந்தாவது புத்ரனாக மஹாவிஷ்ணு வைசாக மாத சுக்லபக்ஷ த்ருதீயை இரவின் முதல் ஜாமத்தில் புனர்வஸு நக்ஷத்ரத்தில் அவதரித்தார். குழந்தைக்கு* **"ராமபத்ரா"** *என பெயர் சூட்டினார்கள். இவர் சிவனை நோக்கி கடும் தவம் இருந்ததால், அந்த தவத்தை மெச்சிய சிவன் இவர் முன் தோன்றி தெய்வீக*

கோடாரியை ராமபத்ராவுக்கு வழங்கினார். கோடாரிக்கு **"பரசு"** என பெயர். அன்று முதல் அவருக்கு **"பரசுராமர்"** என்றபெயர் நிலைத்து நின்றது.

பரசுராம அவதாரம் ஸ்ரீ நரஸிம்ம அவதாரம்போல் ஒரு ஆவேச அவதாரம். தசாவதாரத்தில் ஒரு அவதாரம் மற்றொரு அவதாரத்தை சந்தித்துக்கொண்டது மிகவும் அரிது. ஆனால் பரசுராமரும் விஷ்ணுவின் மற்றொரு அவதாரமான ராமரும் சந்தித்துக்கொண்டார்கள். ராமாயண காலத்திலும், மஹாபாரத காலத்திலும் இருந்த ஒரே அவதாரம் என்ற சிறப்பு ஸ்ரீ பரசுராம அவதாரத்துக்கு உண்டு.

சனாதன தர்மத்தில் கூறப்பட்டுள்ள ஏழு சிரஞ்சீவிகளில் பரசுராமரும் ஒருவர். (ஏழு சிரஞ்சீவிகள் = ஆஞ்சநேயர், விபீஷணர், வியாசர், அஸ்வத்தாமன், மார்க்கண்டேயர், மஹாபலி சக்ரவர்த்தி, பரசுராமர்).

தன் தந்தை ஜமதக்னி மஹரிஷி வளர்த்த **"காமதேனு"** என்ற தேவலோகப் பசுவைக் கவர்ந்து சென்ற கார்த்தவீரியார்ச்சுனனை கொன்றவர். க்ஷத்திரிய மன்னர்களின் 21 தலைமுறைகளைக் கருவறுக்க சபதம் பூண்டவர்.

தந்தையின் வாக்கைக் காப்பாற்றிய அவதாரம் தசரதராமனின் அவதாரம். தந்தை சொல்லை விடவும் சிறந்த மந்திரம் இல்லை என்பதை உலகத்துக்கு உணர்த்துவதற்காக எடுத்த அவதாரம் ஸ்ரீபரசுராம அவதாரம்.

அந்த காலத்தில் கேரள தேசம் என்ற பூமி இருக்கவில்லை. கடவுளின் தேசம் என்று அழைக்கப்படும் கேரளத்தை உருவாக்கியதே பரசுராமர்தான் என்று புராணங்கள் கூறுகின்றன.

*கேரளாவை இன்றும்* **"பரசுராம க்ஷேத்திரம்"** *என்றே அழைக்கிறார்கள். இதனால் கேரள மக்கள் பரசுராமரை அதிக அளவில் வழிபடுகிறார்கள். இது குறித்து மஹாபெரியவா* **"தெய்வத்தின் குரல்"** *ஐந்தாம் பகுதியில் அழகாக விளக்கியுள்ளார்.*

*கேரளாவை உருவாக்கியவருக்கு கேரளாவில் கோவில் இல்லாமல் இருக்குமா? கேரள மாநிலம்* **"திருவல்லம்"** *என்ற இடத்தில் பரசுராமருக்கு தனியாக கோவில் அமைந்துள்ளது. திருவனந்தபுரம் நகரிலிருந்து கோவளம் கடற்கரைக்குச் செல்லும் புறவழிச் சாலையில் 6 கி.மீ. தொலைவில்* **"திருவல்லம்"** *என்ற ஊர் உள்ளது. இந்த கோவிலில் பரசுராமரின் பாதம் பொறிக்கப்பட்ட பீடம் ஒன்று இருக்கிறது. இந்த பீடத்தின் அருகில் பரசுராமர் கோடாரியுடன் நிற்கும் சிலை ஒன்று உள்ளது.* **"பரசுராமர் ஜெயந்தி"** *இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.*

*இந்த வருடம்* **"பரசுராமர் ஜயந்தி"** *03.05.2022 செவ்வாய் கிழமை அன்று வருகிறது. அன்றைய தினம் பெருமாள் கோவிலுக்குச் சென்று வழிபட்டால் விஷ்ணுவின் அனுக்ரஹம் கிடைக்கும். உடல் வலிமையும் தவறை எதிர்த்து போராடும் துணிவும் கிடைக்கும்.*

**D. சூரியநாராயணன்**

*கடந்த பல வருடங்களாக ஸ்ரீ சங்கரா எஜுகேஷ்னல் ட்ரஸ்ட் ஆதரவோடு ஆத்திசூடி கொன்றை வேந்தன் போட்டிகள் நடந்துவருகிறது. இந்த ஆண்டு ஜுன், ஜுலை மாதங்களில் ஆத்திசூடி கொன்றைவேந்தன் மனப்பாட போட்டி நடக்க உள்ளது.*

**ஸ்ரீ சங்கரா எஜுகேஷ்னல் ட்ரஸ்டிற்கு வேதபாரதியின் நன்றிகள்.**

## சுபக்ருது வருஷம் - வைகாசி மாத விசேஷங்கள்

**(மே 15.05.2022 முதல் ஜுன் 14.06.2022 வரை)**

| | | | |
|---|---|---|---|
| 15.05.2022 | வை 1 | ஞாயிறு | ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி |
| 16.05.2022 | வை 2 | திங்கள் | பௌர்ணமி |
| 18.05.2022 | வை 4 | புதன் | ஸ்ரீ திருஞானசம்பந்தர் உற்சவம் |
| 19.05.2022 | வை 5 | வியாழன் | சதுர்த்தி |
| 21.05.2022 | வை 7 | சனி | சஷ்டி |
| 26.05.2022 | வை 12 | வியாழன் | ஏகாதசீ |
| 27.05.2022 | வை 13 | வெள்ளி | ப்ரதோஷம் |
| 30.05.2022 | வை 16 | திங்கள் | அமாவாஸை |
| 03.06.2022 | வை 20 | வெள்ளி | சதுர்த்தி |
| 04.06.2022 | வை 21 | சனி | சேக்கிழார் விழா |
| 05.06.2022 | வை 22 | ஞாயிறு | சஷ்டி |
| 10.06.2022 | வை 27 | வெள்ளி | ஏகாதசீ |
| 12.06.2022 | வை 29 | ஞாயிறு | வைகாசி விஸாகம் |
| 13.06.2022 | வை 30 | திங்கள் | ஸ்ரீ மஹா பெரியவா ஜயந்தி |
| 14.06.2022 | வை 31 | செவ்வாய் | பௌர்ணமி |

### 30.05.2022 திங்கட்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ சுபகிருது நாம ஸம்வத்ஸரே உத்தராயணே வஸந்தருதௌ ரிஷப மாஸே க்ருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாம் புண்யதிதௌ வாஸர: இந்து வாஸர யுக்தாயாம் ரோஹிணி நக்ஷத்ரயுக்தாயாம் விஷ்ணு யோக அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ (ப்ராசீனாவீதி) .......... கோத்ராணம் அமாவாஸ்ய புண்யகாலே தர்ஸ் ஸ்ராத்தம் தில தர்ப்பண ருபேண அத்ய கரிஷ்யே.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 37

## அத்தியாயம் – 2

## "ஸாங்கிய யோகம்"

**த்ரைகு[3]ண்யவிஷயா வேதா நிஸ்த்ரைகு[3]ண்யோ ப[4]வார்ஜுன/**
**நிர்த்[3]வந்த்[3]வோ நித்யஸத்த்வஸ்தோ நிர்யோக[3]க்ஷேம ஆத்மவான்//**
*(கீ 2-45)*

**பொருள் :** *அர்ஜுனா, வேதங்கள் முக்குணமயமான ஸம்ஸாரத்தைப் பற்றியவைகள். நீ இருமைகளினின்று விடுபட்டு, எப்பொழுதும் நடவு நின்று, யோக க்ஷேமங்கள் அற்று, ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருந்து, முக்குணங்களைக் கடந்தவனாகுக.*

**விளக்கம் :** *இந்த பிரபஞ்சம் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணமாயிருக்கிறது. போக ஐஸ்வர்யங்களில் மனதை வைத்திருக்கும் ஒருவனுக்கு ஸ்திரமான புத்தி உண்டாகாது. அவனுடைய மனது எப்போதும் சஞ்சலமாக இருக்கும். அதாவது தான் கேட்டது கிடைத்தால் மனது வேறு ஒன்றைநாடும். எதிலும் திருப்தி அடையாதது நம்முடைய மனது. ஆகையால் பகவான் அர்ஜுனனிடம், அர்ஜுனா நீ விருப்பு – வெறுப்பு என்னும் இருமைகள் அற்று இரு என்றும் நிலைத்த பரமாத்மதத்துவத்தில் நிலைபெற்று இரு. கிடைக்காத பொருளை பெறுவதற்கும், கிடைத்த பொருளை பாதுகாக்கவும் சிந்தனை செய்யாதே. எப்போதும் பரமாத்மாவிடம் ஈடுபாடு கொண்டு அந்த*

*பரம்பொருளை அடையும் ஒரே இலட்சியத்தை மேற்கொள்' என்கிறார்.*

*பகவான் கூறியதுபோல் நம் முக்குணங்களைக் கடந்தவனாக மாறினால் அந்த அவஸ்தை எதுபோல் இருக்கும் என்பதை அடுத்த ஸ்லோகத்தில் கூறுகிறார்.*

**யாவானர்த$^{2}$ உத$^{3}$பாநே ஸர்வத: ஸம்ப்லுதோத$^{3}$கே/**

**தாவான் ஸர்வேஷு வேதேஷு ப்$^{3}$ராஹ்மணஸ்ய விஜானத://**

*(கீ 2-46)*

**பொருள் :** *எங்கும் நீர்ப் பெருக்கெடுத்திருக்கையில் கிணறு பயன்படுகிற அளவு, ஞானத்தையுடைய பிரம்ம நிஷ்டனுக்கு வேதங்கள் பயன்படுகின்றன.*

**விளக்கம் :** *தண்ணீர் இல்லாத இடங்களில் கிணற்று நீர் மிகவும் பயன்படும். ஆனால் எல்லா இடங்களிலும் தெளிந்த நீர் இருக்கும்போது கிணற்று தண்ணீரை யாரும் தேடமாட்டார்கள. அதன் மதிப்பும் குறைந்துவிடும். இதுபோல் பிரம்மத்தை அறிகிற பிராமணனுக்கு எல்லா வேதங்களும் பயன்படுகின்றன.*

*அதாவது வேதங்களின், சாஸ்த்திரங்களின் தத்வக் கருத்துக்களைத் தெரிந்து கொண்ட மகான்களின், ஜீவன் முக்தர்களிடம் வேதங்களும் அந்த அளவே மதிப்பு உள்ளது. சுகபோகங்களில் அவர்களிடம் எந்த மதிப்பும் கிடையாது.*

**ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசம் :**

*ஈஸ்வர சன்னிதானத்தில் பேரின்பம் அடையப்பெற்ற ஆத்மாவானது அற்பமாகிய உலக இன்பங்களில் ஆசை வைப்பதில்லை*

கீதை தொடரும்...

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி

பகுதி - 17

கலியுகம் ஆரம்பித்து 5123 வருடங்கள் ஆகிவிட்டன. கலியுகம் இன்னும் 5,26,877 வருடங்கள் உள்ளன.

சுகப்பிரம்ம ரிஷி பரீட்க்ஷித்துக்கு கலி காலத்தில் என்னவெல்லாம் நடக்கும் என்று விளக்கி கூறினார். அவர் மேலும் கூறியது "பரிட்க்ஷித் ராஜனே!, கலி, தோஷங்களின் மொத்த உருவமாக இருந்தாலும் அது தன்னிடத்தே மிகப்பெரிய குணம் ஒன்றைக்கொண்டிருக்கிறது. அதுதான் பகவானின் நாமங்களைச் சொல்லுவது, கலியுகத்தில் பகவானின் திவ்ய நாமத்தை உச்சரிப்பவர்கள் உத்தம கதியை அடைவார்கள். எல்லா யுகங்களையும் விட கலியுகம் பகவானை அடைய எளிய மார்க்கத்தைக் கொண்டிருக்கிறது' என்றார்.

கீதையில் பகவான் **"யக்ஞானாம் ஜபயக்ஞோஸ்மி......'** = "யக்ஞங்களுள் நான் ஜப யக்ஞம்' என்கிறார். (கீதை 10-25)

கிருதயுகத்தில் தியானமும், திரேதாயுகத்தில் யாக யக்ஞங்களும், துவாபர யுகத்தில் அர்ச்சனைகளும் செய்தால் என்ன பலன்கள் கிடைக்குமோ அதே பலன்கள் கலியுகத்தில் நாம சங்கீர்த்தனத்தால் கிடைக்கும் என்று கூறுகிறது விஷ்ணு புராணம்.

த்யாயன் க்ருதே, யஜன் யக்ஞை
த்ரேதாயாம்-த்வாபரே அர்ச்சயன்
யதாப்நோதி, ததாப்நோதி
கலௌ சங்கீர்த்ய கேசவம் – விஷ்ணு புராணம்.

*ஸ்ரீமத் பாகவதமும் கடைசி ஸ்கந்தத்தில், கடைசி அத்தியாயத்தில், கடைசி ஸ்லோகத்தில் நாமசங்கீர்த்தனத்தைக் குறித்து அழகாக விளக்குகிறது.*

**நாம ஸங்கீர்தனம் யஸ்ய பாப ப்ரணாஸனம்/**
**ப்ரணாமோ துக்கஸமனஸ்தம் நமாமி ஹரிம் பரம்//**
*(பாகவதம் 12-12-23)*

**பொருள் :** *எவருடைய நாமஸங்கீர்த்தனமானது எல்லா பாபங்களை நாசஞ்செய்கிறதோ, எவருக்குச் செய்யும் நமஸ்காரம் துக்கங்களைத் தணிக்கக் கூடியதோ அந்த ஸ்ரீஹரி பரமாத்மாவை நமஸ்கரிக்கிறேன்.*

*ஹிரண்யகசிபு தன் மகன் பிரகலாதனிடம் 'மைந்தா குருகுலம் சென்று வந்தாயே உன் குரு உனக்கு என்ன கற்றுக்கொடுத்தார்' என்று கேட்கிறான். அதற்கு பிரகலாதன் என் குரு எனக்கு ஒன்பது விதமான பக்தியைப் பற்றி கற்றுக்கொடுத்தார் என்று செல்லி அதைப் பாடுகிறான்.*

**ஸ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதசேவனம்/**
**அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் சக்ய ஆத்மநிவேதம்**
**இதி பும்ஸார்பிதா விஷ்ணௌ பக்திஸ்சேன் நவ லக்ஷணா**
*(பா 7-5-23)*

*பத்துவிதமான பக்திகளில் கீர்த்தனம் என்ற மஹாவிஷ்ணுவின் பெருமைகளைப் பாடுவது மிக முக்கியமாக குறிப்பிடப்படுகிறது.*

*நாம சங்கீர்த்தனத்தின் பெருமைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். எத்தனையோ மஹான்கள் இக்கருத்தை வலியுறுத்தி கலியுகத்திற் சிறந்த உபாயம் நாம சங்கீர்த்தனமே என்று கூறி சென்றுள்ளார்கள். நாமும் அவர்களைப் பின்பற்றி நாம சங்கீர்த்தனம் செய்வோம்.*

*தொடரும்...*

# ஔவையார்

*ஒவ்வொரு மாதமும் “ஔவையார்” அருளிய* **நல்வழி** *நூலிலிருந்து மாதம் ஒன்று அல்லது இரண்டு பாடல்கள் இந்தப் பகுதியில் வெளியாகும்.*

**பாடல் 22**

**பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்த**
**கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் – கூடுவிட்டு இங்கு**
**ஆவிதான் போயின பின்பு யாரே அனுபவிப்பார்**
**பாவிகாள் அந்தப் பணம்?**

**பொருள் :** *பணத்துக்காக பாடுபடுகின்றனர். பணத்தைத் தேடிக் கொள்கின்றனர். தேடிய பணத்தை யாருக்கும் தெரியாமல் புதைத்து வைக்கின்றனர். அனுபவிக்காமல் மறைத்து வைக்கின்றனர். இவர்கள் கேடு கெட்ட மனிதர்கள். இப்படிக் கேடுகெட்ட மனிதரே! ஒன்று சொல்கிறேன் கேளுங்கள் உங்கள் உடம்புக் கூட்டை விட்டுவிட்டு உங்கள் ஆவி போன பின் அந்தப் பணத்தை யார்தான் அனுபவிக்கப் போகிறார்கள்? பாவிகளே சொல்லுங்கள்.*

**விளக்கம் :** *பணத்தை சம்பாதித்து பிறருக்கு கொடுத்து உதவாமல், தான தர்மம் செய்யாமல் இருக்கும் மனிதர்களை ஔவையார் பாவிகளே என பழிக்கின்றார். பணத்தை சம்பாதிப்பதும் சேர்த்துவைப்பதும் மட்டும் வாழ்க்கையல்ல, சேர்த்த பணத்தை சிறந்த முறையில் செலவழிக்க வேண்டும்.*

*தொகுப்பு :* **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** *வேளச்சேரி*

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

ஆதவன் அத்தியாயம் — 2 அவதார மஹிமை பாகம் 7

## அத்தியாயம் — 2
## ஜகத்குருவின் அவதாரம்

*மறுநாள் சிவகுருவும் ஆர்யாம்பாளும் மிகுந்த சந்தோஷத்துடன் காலடி திரும்பினார்கள். ஊர் திரும்பியதும் சமாராதனை நடத்தி அதிதிகளுக்கும், அடியவர்களுக்கும் அன்னதானம் செய்தார்கள்.*

*ஒரு சில தினங்களில் ஆர்யாம்பாள் கர்ப்பிணியாகிவிட்டார் என்றவிவரம் எல்லோருக்கும் தெரிந்தது. வேத ஸம்ஸ்காரங்கள் படி ஆர்யாம்பாளுக்கு மூன்றாம் மாதம்* **"பும்ஸவனம்"** *செய்யப்பட்டது.* **("பும்ஸவனம்"** *என்றால் ஒரு ஆண் குழந்தையை முதல் கொண்டுவருதல் என்று பொருள். அதாவது எந்த ஒரு கர்மாவின் மூலம் மனைவியானவர் ஆண் சிசுவை முன் கொண்டுவருகிறாளோ அதற்கு "பும்ஸவனம்" என்று பெயர்)*

*அடுத்து ஆறாவது மாதத்தில் நடத்த வேண்டிய* **"ஸீமந்தம்"** *நடத்தினார்கள். பத்தாவது மாதத்தில் ஒரு நாள்* **"குழந்தை பிறந்தது"** *என்று சொல்லிக்கொண்டே பேறுகாலப் பணிப்பெண் அறையிலிருந்து வெளியே வந்தாள் அதாவது*

**நந்தன வருஷம், வைசாக மாதம், சுக்லபக்ஷத்தில் பஞ்சமியும் புனர்வஸு நக்ஷத்திரமும் சேர்ந்த கடக லக்னத்தில் அபிஜித் முஹூர்த்தத்தில், அதாவது மதியம் உச்சி வெய்யிலில் பகவான் குழந்தையாக அவதாரம் எடுத்தார். அப்போது சப்த கன்னிகைகள் வந்து ஆசீர்வதித்தார்கள். காலடி முழுவதும் சுப சகுனங்கள் தோன்றின. ஊர் மக்கள் மகிழ்ச்சியில் திளைத்தார்கள்.**

குழந்தை பிறந்த பதினோராவது நாள் புண்யாஹவாசனம் பண்ணி சிவகுரு குழந்தையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு குழந்தைக்கு நாமகரணம் – பெயர் சூட்டினார்.

**“எல்லா நலனும் அளிப்பவர்” “உலகத்திற்கு நல்லதைச் செய்யப் போகிறார்”** என்பதற்காக சிவகுரு குழந்தைக்கு **“சம் & கரர்”** என்கிற அர்த்தத்தில் **“சங்கரர்”** என்று பெயர் சூட்டினார்.

இத்துடன் இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.


## ஸ்ரீ ராம நவமி விழா 2022

ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு ஏப்ரல் 14 அன்று வேதபாரதி மற்றும் ஸ்ரீ ராதா கல்யாண மகோத்ஸவ கமிட்டி சார்பில் ஸ்ரீ ராம நவமி உத்ஸவம் நங்கநல்லூர் சுதர்ஸன் கல்யாண மஹாலில் கொண்டாடப்பட்டது. விஷ்ணு சகஸ்ரநாம பாராயணத்துடன் ஆரம்பித்த விழா பஞ்சரத்தின கீர்த்தனைகள், பரதநாட்டியம் மற்றும் குழந்தைகளுக்கான சுலோகங்கள், உபன்யாசம் நடைபெற்றது. விழாவிற்கு முத்தாய்ப்பாக அமைந்தது RBVS மணியன் ஜியின் ராமனும் மானுடனே சொற்பொழிவு திரளான மக்கள் கலந்துகொண்டு வேதபாரதியின் புத்தக அங்கத்தினர்களாக சேர்ந்து விழாவினை சிறப்பித்தனர். வந்த அனைவருக்கும் உணவு






# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்



## என் ஜாக்கிரதை குறைவு

இனிமேல் எனக்குப் பிரஸங்கம் பண்ணுகிற உத்தேசமில்லை. ஆனாலும் இப்போதுதான் என்னைப் பார்க்க வருகிறவர்களும், அட்வைஸ் கேட்கிறவர்களும் ஜாஸ்தியாகிக் கொண்டு வருகிறார்கள். அதனால் இனிமேல் பிரஸங்கம் பண்ணாவிட்டாலும், என்னிடம் வருகிறவர்களிடம் பேசுகிறபோது, நல்லதைக் சொல்கிறபோது, ஒவ்வொருவனும் பொதுத்தொண்டு ஏதேனும் அத்யாவச்யமாகப் பண்ணித்தானாக வேண்டும் என்று சொல்லும்போதே, “without prejudice to” (இன்னதற்கு ஹானி இன்னியில்) என்று அநேக ஒப்பந்தங்களில் qualifying clause போடுகிறார்களே, அந்த மாதிரி இதற்கும் ஒரு நிபந்தனை, ’தன் கார்யம், குடும்பக் கடமைகளைக் கொஞ்சங்கூட விடாமல்’ என்றும் போடவேண்டுமென்று தீர்மானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். பிற்பாடு இது ஸமயத்தில் நினைவு வந்து சொல்வேனோ மாட்டேனோ, அந்த (பரோபகார) ஸப்ஜெக்டே என்னை இழுத்துக்கொண்டு போய்விடுமோ என்னவோ, எப்படியானாலும், இன்றைக்கேனும் அந்தத் தாயார் தகப்பனார் படுகிற கஷ்டத்தைப் பார்த்ததில் இப்படிச் சொல்கிற ஞானம் எனக்கு உண்டாயிருக்கிறது. “தான் அவிழ்த்துப்போட்ட துணியைத் தாயார்க்காரி தோய்க்கணும்; வயஸுக்காலத்தில் அப்பன்காரன் கடை கண்ணி ஏறி இறங்கணும்” என்று விட்டு விட்டு ஒருத்தன் ஸோஷல் ஸர்வீஸுக்கு கிளம்பணும் என்று நான் நினைத்ததேயில்லை.



# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்

*3.4 வேதங்கள் - செய்யாமொழி :*

மொழிகளின் தோற்றத்தைப் பற்றி இதுவரை கண்டோம். இனி, வேதங்களின் தோற்றம் பற்றிய விவாதத்தை மீண்டும் எடுத்துக் கொள்வோம்.

'ரூதச்சொற்கள் ஆதியந்தமற்றவை எனக்காட்டப் பட்டிருக்கிறது. ஆனால் அவற்றிலிருந்து உருவாக்கப்பட்ட வாக்கியத்திற்கு ஓர் ஆசிரியர் இருக்க வேண்டும். வேதங்களில் உரைநடையும், செய்யுளும் அடங்கியுள்ளன. எனவே அவற்றை யார் உருவாக்கினாரோ, அவர் தான் ஆசிரியராக இருக்க வேண்டும்'.

அவ்வாறு உருவாக்கியவரின் பெயரை யாரும் நினைவு கொள்ளவில்லையே!


'அவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த காரணத்தால், அவர்களின் பெயர்கள் மறக்கப்பட்டிருக்கலாம்''.

2000 ஆண்டுகளுக்கு மேலும் முன்பாக வாழ்ந்த காளிதாசன், அபிக்ஞான சாகுந்தலம் என்ற காவியத்தின் ஆசிரியரென எல்லோருக்கும் தெரியும். 5000 ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த வ்யாஸர், மகாபாரதத்தின் ஆசிரியரென அறிவோம். எப்பொழுது வாழ்ந்தார் என்று அறியப்படாத வால்மீகி இராமாயணத்தை இயற்றியவர் என்பதை எவரும் அறிவர். 2000 ஆண்டுகளுக்கு முன்னதாக உருவாக்கப்பட்ட வேதங்களின் ஆசிரியர் பெயர் மட்டும் எப்படித் தெரியாமல் போக முடியும்?

தொடரும்..

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

# அடுத்தவர் துயரத்தில் காணும் சந்தோஷம்



இரண்டு நண்பர்கள் ஒரு பொருட்காட்சி நிலையத்திற்கு சென்றார்கள். அங்குள்ள பொருட்களைப் பார்த்துக் கொண்டே வரும்போது, அவர்கள் ஓர் ஆஞ்சநேயருடைய சிலையைக் கண்டார்கள். நண்பர்களுள் ஒருவன், அந்த ஆஞ்சநேயரின் வால் சாதாரணமாக இருப்பதைக் காட்டிலும் சற்று நீளமாக உள்ளதைக் கவனித்தான். அருகில் சென்ற அவன், அந்த வாலின் நுனியில் ஒரு மணி கட்டப்பட்டிருந்ததைப் பார்த்தான். ஆவல் மிகுதியால், அவன் தனது கையை மணியின் உள்ளே நுழைத்தான், அடுத்த வினாடியே அவன் 'ஆ' என்று அலறிக் கொண்டே தனது கையை 'சட்' டென்று வெளியே இழுத்துக் கொண்டான். இவனது கூச்சலுக்கு என்ன காரணம் என்று நண்பன் கேட்ட போது, "ஓ! நான் சந்தோஷத்தில் அப்படி அலறினேன். நீயும் மணியின் உள்ளே கையை வைத்துப் பார் உனக்கே புரியும், அது எவ்வளவு சுகமான ஓர் அனுபவம்" எனக் கூறினான்.

தொடரும்.

## குழந்தைகள் பகுதி

*அன்பு குழந்தைகளே!!! நலமாக இருக்கிறீர்களா?*

*மாதா மாதம் உங்களுக்காக உபயோகமான பல விவரங்களை இந்தப் பகுதியில் எழுதிவருகிறேன். இந்த மாதமும் மிக மிக முக்கியமான ஒரு தகவலைப் பற்றி கூறப்போகிறேன்.*

*பறவைகளின் ராஜா யார் தெரியுமா? கழுகு தான் பறவைகளின் ராஜா. இது மற்ற பறவைகளிடமிருந்து மிகவும் வித்தியாசமானது. அது வாழும் விதம், பிரச்சனைகளைக் கையாள்வது, பழக்க வழக்கங்கள் ஆகியவை மிகவும் சிறந்ததாக இருக்கும். அதனிடமிருந்து மனிதர்களாகிய நாம், முக்கியமாக குழந்தைகளாகிய நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம். அவை என்ன என்பதைப் பார்ப்போமா?*

*1. கழுகு எப்போதும் தன்னந்தனியாக மிக உயரத்தில்தான் பறக்கும். மற்ற பறவைகளான காகம், கிளி, புறா போன்றவைகளைப் போல் கூட்டமாக பறக்காது. மற்ற பறவைகளுக்கு உயரத்தில் பறக்க சக்தியோ திறமையோ கிடையாது.*

*பலவீனமானவர்கள் எப்போதும் கூட்டத்துடன் இருக்கவே விரும்புவார்கள். ஆனால் தன்னம்பிக்கை நிறைந்தவர்கள் தன்னந்தனியாகவே சவால்களைச் சந்திக்க தயாராக இருப்பார்கள். பருந்தைப்போலவே நீங்களும் உயர்ந்த எண்ணங்கள், குறிக்கோள் உள்ளவர்களுடன்தான் பழக வேண்டும். அப்படி பழகினால் உங்களுடைய எண்ணங்களும் குறிக்கோள்களும் உயரும். மனதின் உயரம் வாழ்வின் உயரம் என்பதை பிரதிபலிக்கக்கூடியது கழுகு.*

*2. கழுகுகளுக்கு 5 கி.மீ. தூரத்தில் இருக்கும் அதனுடைய இரையைக்கூட பார்க்கமுடியும். அதை நோக்கி பறக்கும்போது அதைப் பிடிக்கும்வரை இடையில் எந்த பிரச்சனைகளும் தடைகளும் வந்தாலும் அதனுடைய கவனம் அந்த இரையிலிருந்து சிறிது கூட சிதறாது. இதுபோல் நமக்கு என்ன பிரச்சனைகள் வந்தாலும், எந்த தடைகள் வந்தாலும் நம்முடைய கவனம் நம்முடைய குறிக்கோளின் மேல்தான் இருக்க வேண்டும். வெற்றி அடையும் வரையில் நம்முடைய கவனம் நம்முடைய குறிக்கோளின் மேல்தான் இருக்க வேண்டும். வெற்றி அடையும் வரையில் நம்முடைய கவனம் சிதறவே கூடாது.*

*3. பயம் என்றால் என்னவென்றே கழுகிற்கு தெரியாது. அதனுடைய இரை எவ்வளவு பெரியதாக இருந்தாலும், வலிமையானதாக இருந்தாலும் அந்த இரையை அடையும் வரையிலும் அது போராடும் கழுகைப்போல் நீங்களும் உங்களுடைய வெற்றிக்காக போராட வேண்டும்.*

*மற்றகுணங்களை அடுத்தவாரம் பார்ப்போமா? கழுகைப்போல் உங்களுடைய கவனத்தை உங்களின் படிப்பில் செலுத்துங்கள்.*

*உங்கள் அன்புள்ள :* **"வேதபாரதி" தாத்தா**



99940 89133 99940 89140

SRI SASTHA CATERING


We are Supplying Meals, Tiffin & Marriage Sear Variation in Order


14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.

# பெற்றோர்களே! கவனியுங்கள்!
## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌளி பாகம் - 3 பகுதி - 17

**“அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை**
**படைத்தகையால் பாடு பெறும்”**

*(அதிகாரம் 77, குறள் 768)*

*“படைமாட்சி” எனும் அதிகாரத்தில் வள்ளுவர் மிக, மிக, முக்கியமான குறிப்பு ஒன்றினை அளிக்கின்றார். “படைமாட்சி” என்றால் “இராணுவத்தின் பெருமை” என்றும் பொருள் கொள்ளலாம்.*

*வாழ்க்கை என்பதை நித்தியப் போர்க்களத்தில் தானே கழிக்கின்றோம். “போர் புரியும் மன உறுதி மற்றும் உடல் உறுதித் திறமைகள் படை வீரர்களிடம் இல்லை என்றாலும், சேனை (இராணுவம்) அதன் ஆழ்ந்த பயிற்சி கட்டுப்பாட்டினால் சிறப்பாக செயல்படும்” என்று திருவள்ளுவர் கூறுவது நம் வாழ்க்கைக்கும் பொருந்தும்.*

*ஒரு தந்தை தன் மகனின் மதிப்பெண்களை விட மனம் செம்மையாக, நேர்மறைஎண்ணங்களோடு உள்ளதா என்று கவனிக்க வேண்டும். இதற்கு மகன், மகள் எனும் வித்தியாசம் ஏதுமில்லை. மனம் செம்மையடைய சிறந்த எண்ணங்களைக் கொள்ள வேண்டும்.*

*வயதோ பதினாறு, மனதோ பத்து வயதுக்குரியதாக இருப்பதை பல குழந்தைகளிடம் காணலாம். தறிகெட்டு ஓடும் புத்தி கொண்ட வயது என்று தந்தைக்கு நன்றாகத் தெரியும். பத்து*

வயதிலிருந்து மனதிற்கும், எண்ணங்களுக்கும், அறிவிற்கும் அளிக்கும் பயிற்சி என்பது தந்தையால் மிக அதிகமான சாத்தியம் கொண்டது.

உடனிருப்பது என்பது தொண தொணப்பாக மாறக்கூடாது. இது பல தாய்மார்களால் செய்யப்படும் தவறு. இதை தந்தை கவனித்து அதை ஊக்கமாக மாற்றும் பயிற்சியை அளிக்க வேண்டும்.

ஓர் எறும்புக்கு சாத்தியப்படுவது, ஓர் 'ஈ' க்கு சாத்தியப்படாது. நான் பார்த்த வரை ஒப்பிட்டுப் பார்க்காத பெற்றோர்களே கிடையாது என்பேன். ஒப்பிடுவது என்பது இயற்கையாக பறக்கும் பறவையின் சிறகுகளை முறித்து, சோதிடக்காரனின் கூண்டுக்குள் தான் தள்ளிவிடும் என்று புரிந்து செயல்படுவது ஓர் தந்தை புரிந்து கொள்ள வேண்டும்.

"சரி, விடும்மா, அப்புறமாக அவன்கிட்ட பேசுகிறேன்" என்று கணவன் கூறினால் "சரி" என்று மனைவி ஒதுங்கி வழி விட வேண்டும்.

"அப்பாட, தீர்ந்தது பிரச்சனை" என்று கணவன் ஓட்டம் பிடிக்காமல், மீண்டும் மனைவி ஞாபகப்படுத்தாமல் தானே முன்வந்து மகன் அல்லது மகளிடம் பேசி மனப்பயிற்சி அளிக்க தயாராக தன் மன நிலையை வைத்துக் கொள்ள வேண்டும்.

"நீ உனக்காக மட்டும் படித்தால் போதும். எங்கள் எதிர்பார்ப்புகளுக்கு தீனி போட உன்னை பெற்றுக் கொள்ளவில்லை. உன் திறமைக்கு ஏற்றபடி நீ படிக்க முயற்சி செய்" என்று தட்டிக் கொடுத்து விட்டு, அவனிடம் உள்ள குறைகள் அது உடல் சம்பந்தமானதா அல்லது மனம் சம்பந்தமானதா என்று அறிந்து புரிந்து கொள்ள நல்ல மருத்துவர்களை நாடி உங்கள் சந்தேகங்களை போக்கிக் கொள்ளுங்கள்.

கடுமையான வார்த்தைகள் வெளி உலகிலிருந்து தாக்கும் பொழுது, அதற்கு குடையாக நின்று ஆறுதல் கூறி மனதில் தைரியமும், சாமர்த்தியமும் பயிற்சி அளிக்க வேண்டிய கடமை பெற்றோர்களுக்கு குறிப்பாக தந்தைக்கு உணர்ச்சி வயப்படாமல் செய்து சரி செய்ய வேண்டும்.

அதேசமயம் வீட்டிலிருந்தே அவமான அம்புகள் “மக்கு, பிரயோசனப்படாது, உபயோகப்படாது'' போன்றவைத் துளைத்தால் அந்த குழந்தை வெளி உலகில் ஆறுதல் தேடினால் என்ன நடக்கும் என்று கூறவும் வேண்டுமா?

இன்று வெளி உலகம் என்பது உங்கள் மகன் அல்லது மகள் கையில் உள்ள சின்னஞ்சிறிய கைபேசியில் உள்ளது. அதனால் ஏற்படும் பிரச்சனைகள் பற்றி உங்களுக்கு தெரியாதா?

பாடப்பயிற்சி, மதிப்பெண் இலக்கு முக்கியம் தான். ஆனால் அதைவிட உடற்பயிற்சியும், மன பயிற்சியும் மிக, மிக முக்கியம் என்பதை தந்தை உணர்வது மிக, மிக முக்கியம்.

கல்விக்கும், தேர்வுக்கும் பயிற்சி மட்டும் தேவை, பயம் தேவையில்லை. மீண்டும் ஒரு முறை குறளைப் படியுங்கள்.

தொடரும்......

## வாசகர் கடிதம்

ஒவ்வொரு மாதமும் குழந்தைகள் பகுதி மிக அருமை. மிகவும் பயனுள்ள தெரிந்துகொள்ள வேண்டிய குறிப்புகள். தொடர்ந்து வழங்க வேண்டுகிறேன்.

**ஸ்ரீ சீனிவாசன்,** தாம்பரம்.


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின்**
**துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**



There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



V Krishnamoorthy
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!

அடையாறு கேன்சர் மருத்துவமனையில் சிகிச்சை பெற வரும் வெளியூர் ஏழை புற்றுநோயாளிகள் நமது அன்புக்கும், அரவணைப்பிற்கும் உரியவர்களே. தங்களது தாய்வீடாக எண்ணி, ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் நம்ம தர்மசாலாவில் தஞ்சம் புகும் ஏழை புற்றுநோயாளிகளை – தனது உறவுகளாய் எண்ணி அவர்களுக்கு அளவற்ற அன்பையும் – ஆறுதலையும் வழங்கி, புற்றுநோய் பற்றிய அச்சத்தைப் போக்கி, எதிர்காலத்தின் மீது நம்பிக்கை கொள்ளச்செய்கிறது நமது நம்ம தர்மசாலா. சாதி – மதம் – இனம் போன்ற பாகுபாடுகளைக் கடந்து அன்பின் அஸ்திவாரத்தில் இயங்கும் நம்ம தர்மசாலாவில் ஏழை புற்றுநோயாளிகளுக்கு மூன்று வேளை சுவையான – சைவ உணவு; பாதுகாப்பான– சுகாதாரமான தங்குமிடம் ஆகியவை ஏழை புற்றுநோயாளிகளின் சிகிச்சை காலம் முழுவதும் **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஏழை புற்றுநோயாளிகள் தங்களது சிகிச்சையை தடையின்றி பெற்று விரைவில் குணமடைகிறார்கள். இறை பணிக்கு நிகரான உயிர்காக்கும் இத்திருப்பணிக்கு உங்கள் அனைவரின் நிதியுதவியை ஸ்ரீ மாதா டிரஸ்ட் மனதார வேண்டுகிறது. ஏழை புற்றுநோயாளிகளுக்கு உதவிடுங்கள்... உண்மையான இன்பம் இதுவே என்று உணர்ந்திடுங்கள்...

# மன்னார்குடியிலிருந்து சென்னை மாநகரத்திற்கு ஓர் தர்ம யாத்திரை

மண் மணம் மாறாத, வெள்ளந்தி மனிதரான திரு. **சிதம்பரம்** அவர்கள் தனது அன்பு மனைவி திருமதி. **கமலா** அவர்கள் மற்றும் தனது நெருங்கிய நண்பர் குடும்பத்தினருடன் நமது அலுவலகம் வந்திருந்தார். திரு சிதம்பரம் தம்பதியர்... நமது நிர்வாக அறங்காவலரிடம்... நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்று நோயாளிகளை நேரில் நலம் விசாரித்து, அவர்களது பசி தீர்க்க தங்களது நன்கொடையை வழங்கிட வந்ததாக கூறி ரூபாய் ஒரு லட்சம் காசோலை வழங்கி மகிழ்ந்தனர். மேலும், நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்று நோயாளிகளுடன் ஆறுதலாக உரையாடியும், அவர்களுக்கு அன்புடன் உணவு பரிமாறியும் உள்ளம் மகிழ்ந்தனர்.




செங்கல்பட்டுக்கு அடுத்த மாமண்டூர் கிராமத்தில் நாம் நிர்மாணிக்க உள்ள **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்லம்** இயற்கைச் சூழலில் அமைய உள்ளது. இதன் கட்டுமானப் பணிகளுக்கு சுமார் **ஆறு கோடி ரூபாய்** செலவாகும் என்று கணக்கிடப்பட்டு, இதுவரை இரண்டு கோடி ரூபாய் நன்கொடையாக நம்மிடம் வந்துள்ளது. தற்போது முதற்கட்ட கட்டிட வேலைகள் ஆரம்பித்துவிட்டது. வேலைகள் முடிந்து 2023 சித்திரையில் நமது இலவச முதி யோர் இல்லம் ஏழை முதியவர்களின் பயன் பாட்டிற்கு கொண்டு



வரவேண்டும் என்கிற எங்களது நல்ல எண்ணம் நிறைவேற உங்களின் தாராள நிதியுதவியை வேண்டுகிறோம். **இம்முதியோர் இல்ல கட்டிட நிதியாக ரூ.5,00,000/- வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில், இம்முதியோர் இல்லத்தில் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும்.** தாங்கள் விரும்பிய தொகையை நன்கொடையாக வழங்குவோர் பெயரும் நமது முதியோர் இல்லத்தில் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும். **சிந்திப்பீர்... செயலாற்றுவீர்...**

## ஸ்ரீ ஜயேந்திர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்ல வரைபடம்



## தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்

NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act.

Sri Matha Trust PAN No. **AACTS9747G**

நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, (next to Harini Skin & Laser Clinic) Chennai-20. Tel: 044 - 24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. **9500001065 / 9003247857**

vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# சாதனைப் பறவைகள்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

## பாட்டிகள் இருவர்!

### எச்சம்மா பாட்டி, முதலியார் பாட்டி





தன்னலமற்ற ஆன்மீகச்சாதனை புரிந்த ஸ்ரீ ரமணபக்தைகளான இரு பாட்டிகளை சாதனைப் பறவைகள் பட்டியலில் இடம்பெறச் செய்வதில் சிறிது புண்ணியம் எனக்கும். இதனை வாசிக்கும் வேதபாரதி வாசகர்களுக்கும் கிடைக்கட்டுமே என்கிறஎண்ணத்தில் இக்கட்டுரையை உங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

எச்சம்மா பாட்டி மறைந்தபோது "இன்னும் முதலியார் பாட்டி பாக்கி இருக்கா" என்றாராம் பகவான் ஸ்ரீ ரமணர். முதலியார் பாட்டி மறைந்த போது, "பெரிய பொறுப்பு முடிஞ்சது" என்றாராம். "தூய அன்பினால் பகவானைப் பிணைத்துக் கட்டிப் போட்டு விட்டவர்கள் அவர்கள் இரண்டு பேரும். அனைத்தையும் விட்டு விட்டு பகவானே கதி என்று அவரிடம் முழுமையாகத் தங்களை அர்பணித்துக் கொண்டவர்கள்.

எச்சம்மா பாட்டி தன் கணவர் குழந்தைகளுடன்

*திருவண்ணாமலைக்கு அருகே வசித்து வந்துள்ளார். மூன்று முறைஇளம் வயது ஸ்ரீ ரமண பகவான் அவருக்கு கனவில் காட்சிதந்து உணர்த்திய விஷயங்கள் அவருக்குப் புரியவே இல்லை. ஆனால் முதல் முறைகனவில் வந்த பிறகு, சில நாட்களிலேயே கணவர், மகன் மற்றும் ஒரு மகளை இழந்தார். துக்கம் தாங்காமல் இரண்டாவது பெண்ணை பிடித்துக் கொண்டு தன் கிராமத்திற்கு வந்தார். சில நாட்களிலேயே அவளையும் இழந்தார். பாட்டி மகா துக்கத்திற்கு ஆளாகி வடக்கே யாத்திரை மேற்கொண்டு யார் யாரையோ சந்தித்து உபதேசங்கள் பெற்று எதுவும் அவரது மன பாரத்தைக் குறைக்கவில்லை. இறுதியாக 1908 ம் ஆண்டு விருபாக்ஷகுகையில் ஸ்ரீ ரமணரை தரிசித்தார். இனி இவருக்கு சேவகம் செய்வதே தன் வாழ்நாள் லட்சியம் என்று தீர்மானித்தார்.*

*ஸ்ரீ ரமணரின் முன் போய் நின்றார். கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்துகொண்டே இருந்தது. என்ன ஆச்சர்யம், ஒரு வார்த்தை கூடப் பேசாத பகவானின் கண்களிலிருந்தும் கண்ணீர் பிரவாகம்! பாட்டியின் மன பாரம் அன்றோடு அடியோடு காணாமல் போனது! இருப்பினும் பாட்டிக்கு தான் ஒரு பெண் குழந்தையை தத்து எடுத்து வளர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு பகவானின் அனுமதியுடன் ஒரு பெண்குழந்தையை "செல்லம்மாள்" என்று பெயரிட்டு அழைத்துவந்தார். அவள் மூலம் பகவானுக்கு உணவு கொடுத்து அனுப்புவதை வழக்கமாகக் கொண்டார். ஆனால் அந்த பெண்ணும் இந்த பூவுலகை விட்டு மறைந்தாள். பாட்டி தனி மரமானாள். பகவான் பாட்டியை யோக மார்க்கத்தில் கவனம் செலுத்தப்பணித்தார். ஆனால் பாட்டிக்கு அது*

அவ்வளவாகக் கைகூடவில்லை. பகவானுக்கு ஒரு லட்சம் வில்வ இலைகளை சமர்பிக்க லட்சியம் கொண்டு வில்வ இலைகளைப் பறிக்க ஆரம்பித்தார். ஐம்பதாயிரம் தான் முடிந்தது என்று பகவானிடம் சென்று சொன்னார். "மீதி ஐம்பதாயிரத்தை உன் உடம்பைக் கிள்ளி அர்ப்பணியேன்" என்றார். "அது எவ்வாறு சாத்தியம்? எனக்கு வலிக்குமே என்றாள் பாட்டி. வில்வமரத்திற்கு வலித்திருக்காதா? இதனை நான் உனக்கு சொல்லிக் கொடுக்க வேண்டுமா?" என்று கேட்டார் பகவான். பாட்டியின் மனது பக்குவப்பட்டது.

ஒரு நாள் ரமணாஸ்ரமத்தில், பாட்டியிடம் "இனி நீங்கள் பகவானுக்கு சாப்பாடு கொண்டுவரத் தேவையில்லை" என்று சொல்லிவிட்டார்கள். எச்சம்மா பாட்டி, பகவானிடம் சென்று, "நீங்களும் அந்த அருணாச்சலேஸ்வரர் போல் கல்லாகிவிட்டீர்களா? என்று கேட்டுவிட்டுப் போய்விட்டார். போஜனத்திற்கான மணி ஒலித்தது ஆஸ்ரமத்தில் ஸ்ரீ ரமணரும் அங்கே சென்று அனைவருடன் சாப்பிடுவது வழக்கம். ஆனால் அவர் தன் இருக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. புரிந்து கொண்டார்கள். எச்சம்மா பாட்டிக்கு மன்னித்துவிடும்படி செய்தி சொல்லி விட்டார்கள். பாட்டி அப்படியும் வரவில்லை. "நீங்கள் வரவில்லை என்றால் பகவான் உணவருந்தமாட்டார் என்றதும் மனம் மாறினார் அந்த பரம பக்தை.

மற்றொருநாள், எச்சம்மாபாட்டி, தன் இயலாமை காரணமாக, பகவானுக்கான உணவைத் தயாரித்து, ஒருவர் மூலம் கொடுத்தனுப்பினார். ஆஸ்ரமத்தில் அதனை வாங்கி வைத்துவிட்டு மறந்தே போனார்கள். வழக்கம் போல பகவான்

போஜனாலயத்தில் ஒரு வார்த்தை பேசாமல் காத்திருந்தார், "சாப்பிடுங்கள்'' என்ற தலையசைப்பையும் செய்யவில்லை. அதனால் யாரும் சாப்பிடவில்லை. பகவானை நன்கு அறிந்திருந்த ஒருவர், "எச்சம்மா பாட்டி அனுப்பி வைத்த உணவை பகவானுக்கு பரிமாறினீர்களா?'' என்று கேட்டவுடன் தான் தவறைஉணர்ந்து பகவானுக்கு பாட்டி அனுப்பிவைத்த உணவைப் பரிமாறினார்கள். பக்தைக்கும் பகவானுக்கும் உள்ள பாசத்திற்கு இதைவிட சிறந்த உதாரணம் வேண்டுமா என்ன?

எச்சம்மா பாட்டியின் இறுதி மூச்சுக்காலம் பாட்டி அசைவற்றுக்கிடந்தாள். ஆஸ்ரமத்தில் பகவானும் கல்லாகச் சமைந்திருந்தார். நேரம் போய்கொண்டே இருந்தது. "கோமா'' என்றார்கள். கூடியிருந்த சில பெண்மணிகள் அதனை சோதித்துப் பார்க்க நினைத்து, உரத்த குரலில், "பகவானுக்கு இன்னும் உணவு போய் சேரவில்லை'' என்றார்கள். பாட்டி சட்டென்று கண்விழித்து, "ஏன் என்ன ஆச்சு? என்றாள். "இல்லை இல்லை, நாங்கள் சும்மாதான் சொன்னோம் பகவானுக்கு உணவு சென்று சேர்ந்துவிட்டது. நீங்கள் கவலைப்படாதீர்கள் என்றார்களா. அடுத்த நொடியில் எச்சம்மா பாட்டியின் உயிர் உடல் கூட்டைவிட்டுப் பிரிந்தது. அவள் தன் கூட்டை இறக்கி வைத்து விட்டாள். நான் இன்னும் சுமந்து கொண்டிருக்கிறேனே'' என்றார் பகவான்.

ஸ்ரீ ரமணரின் இன்னொரு பரம பக்தை
முதலியார் பாட்டி,

அடுத்த மாதம் தொடரும்...

உ

திருமண பொருத்தம் இலவசம்

(அனைத்து சமூகத்தினருக்கும்)

வாட்ஸ்அப் மூலம் மட்டும்



பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.

Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS

BK MATRIMONY.com
An Auspicious Beginning ...

தேதியூர். V.J. ராமன்

ஆத்மார்த்த ஜோதிடர்

9003195599
9445230940

## உறவுகள் தொடர்கதை

சென்றமாத தொடர்ச்சி....

"வேள்விக்குடி சுப்ரமணியசாமி", குழந்தையைக் காப்பாத்தணும்னு சொல்றதை பத்தாயிரம் முறையாவது கேட்டிருப்பேன்.

"சிங்கப்பூர்ல என்னென்ன பண்ணின, விவரமாச் சொல்லு" எனக் கேட்டார்.

இவ்வாறு கதை பேசிக்கொண்டே சில நாட்கள் ஓடின.

"அபர்ணா" என அழைத்தார். நான் ஊரிலிருந்து வாங்கிக் கொண்டு வந்த ஷாலை மடித்து மடித்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டார்.

"அபர்ணா கண்ணா, அந்த பைல ஒரு ப்ரவுன் கவர் இருக்கும், எனக்கு எடுத்து குடு, இங்க வந்து உட்காந்துக்கோ"

"இதோ வரேன் தாத்தா"

பையைப் பிரித்து அவரே அந்தக் கவரையும் எடுத்துப் பார்த்தால், 'சுப்பிரமணியசாமி துணை" என கவர் மேல் எழுதியிருந்தது. பிரித்தால் பத்து, இருபது, நூறு என ரூபாய் நோட்டுகள்.

"இதை எண்ணிக் குடு"

'எப்பிருந்து தாத்தா இதை சேர்த்தி வச்சிருக்க"

"கணக்கெல்லாம் தெரியல, எவ்வளோ இருக்கு?"

இருபதாயிரத்தி எழுநூறு"

'ஆமா சரியா இருக்கு, எனக்கொரு காரியம் பண்ணனும், இந்தப் பணத்தை நீ எப்படியாவது நம்ம பூர்வீக ஊர்ல இருக்கிற கோவிலுக்கு சேர்த்திடறையா?"

"ஒ, எந்த ஊரு? நீ வேள்விக்குடினு சொல்வியே,

நம்ம இதுவரைக்கும் அங்க போனதேயில்லையே,

'போனதில்லை தான். ஆனா என் மனசு பூரா அங்க இருக்கே' போகத்தான் கை வரல. உன் அப்பாகிட்டையும் எனக்கு கேக்க ஒப்பாது, என்ன செய்ய? நீ இந்த காரியத்தை பண்ணுவியா".

"நீயும் வா, நான் கார்லயே உன்னை அழைச்சிண்டு போயிடுவேன்".

"சரிதான் போ, பேஷா போலாம்; அப்படியே நாங்க இருந்த வீடும் அங்கயே தான் இருக்கு. எங்க மூணு கட்டு தலைமுறை இருந்த வீடு, கேட்பாரற்று கிடக்கு'.

'நீ ஏன் இதெல்லாம் சொன்னதே இல்லை'

'காலப்போக்கில, எல்லாத்தையும் உட்டாச்சு, வேற என்னத்தைச் சொல்ல'

என் கையை பிடித்துக்கொண்டு நினைவு வந்தும் வராமையும் விட்டு விட்டு கூறினார்.

ஊரையும், வீட்டையும் பார்க்க வேண்டும் என்கிற ஆசை பன்மடங்கு உயர்ந்தது.

இந்த சம்பாஷணை நடந்த ஒரு வாரத்திலேயே தாத்தா தவறினார்.

இன்று - வேள்விக்குடியில் :

கும்பகோணம் கடப்பா என அப்பா கூறிய ஞாபகம் இருந்தது. ஆனால் இன்று மாலை கமலா மாமி கையால் சாப்பிட்ட இட்லியும், கடப்பாவும் நாவிலேயே சுழன்று கொண்டிருந்தது.

விஸ்வநாதன் மாமா என்னை அழைத்து, அவர் பையனுடன் கோவிலுக்கு அனுப்பி வைத்தார்.

கையில் தாத்தாவுடைய பிரவுன் கவரை எடுத்துக்கொண்டு போனேன் அது "வெறும் பணம்"

இல்லை. பல வருடங்களுக்குடைய வேண்டுதல்கள் அடங்கியது. ஐந்து, பத்து என தாத்தா பல வருடங்கள் சேர்த்து வைத்து கோவிலுக்குள் சென்று சுப்பிரமணியசுவாமி சன்னதியில் நின்று ஒரு நிமிடம் தாத்தா அங்க நிற்பதாக உருவகப் படுத்திக்கொண்டு குருக்களிடம் காணிக்கையை செலுத்தியாயிற்று. என்னிடம் தாத்தா காட்டிய அளவற்ற அன்பிற்கு என்னால் செய்ய முடிந்தது இதுதான்.

கோவிலில் இருந்து வெளியே வந்தவுடன்,

'மாமா,மேலைதெருவில தாத்தா வீட்டுக்கு கூட்டீண்டு போரீங்களா?"

ஏறத்தாழ தெருவில் நான்கு ஐந்து வீடுகள் பூட்டி பழுதடைந்துதான் இருந்தன.

அதோ அந்த இரண்டாவது வீடு தான். காமாக்ஷி இல்லம்னு போட்டுருக்கே".

'உள்ளே போகலாமா'

மெதுவாக உள்ளே காலெடுத்து வைத்தாள். முற்றத்தின் வழியாக ஒளி அந்த வீட்டை நிரப்பிக் கொண்டிருந்தது.

பின்பக்கம் ஒரு சிறிய ரூம் மூடப்பட்டிருந்தது. உள்ளே கதவைத் தள்ளி சென்றால் ஓரமாக பழைய சைக்கிள், அப்பாவுக்கு அந்த சைக்கிளின் புகைப்படத்தை வாட்ஸாப்பில் அனுப்பி விட்டு, கால் செய்தேன். தாத்தா இறப்பதற்கு முன் என்னிடம் கடைசியாக பேசிய வார்த்தைகளை சின்ன மாற்றம் கூட இல்லாமல் கூறினேன்.

தாத்தா என்னிடம் கூறியது,

"அபர்ணா, நான் என் சின்ன வயசிலிருந்து

*மேம்போக்காவே வளர்ந்துட்டேன். உன் பாட்டிக்கோ, அப்பாவுக்கோ ஒண்ணும் பண்ணதில்லை. உன் அப்பா தானே வளர்ந்தான். நல்ல பிள்ளையா என்னைக்குமே இருந்திருக்கான். என்னோட முன்கோபம், பொறுப்பில்லா தனத்தால அவனுக்கு அவமானம் மட்டுமே பல இடங்களில கிடைச்சிருக்கு, ஆனா ஊரை விட்டு வந்த பிறகு, எல்லா எடத்தலயும் அவனால பெருமை மட்டுமே எனக்கு கொடுத்திருக்கான். இதெல்லாம் யார்கிட்டேயும் சொல்ல முடியாம தவிச்சிருக்கேன். நான் என்னத்தச் சொல்ல, உனக்கு புரியுமோ, புரியாதோ. பல வருஷம் முன்னாடி அவன் காலேஜ் போகும் போது ஒரு சைக்கிள் மட்டும் என் சம்பாத்தியத்துல வாங்கி வைச்சேன், ஆனா அவன்கிட்ட அதை கொடுக்கவே இல்லை. ஏதோ அவன் சின்ன வயசிலே, பெரிய மனுஷன் மாதிரி நடந்துப்பான். அதனால வாங்குனதை கொடுக்காமையே விட்டுட்டேன். நம்ம பூர்வீக வீட்டுலதான் இன்னும் இருக்கணும். நீ இதை அவன்கிட்ட அப்புறம் சொல்லுவியா?*

*அப்பாவிடம் ஃபோனில் அதைச் சொன்னவுடன் எதிர்பக்கம் ஒரு ஆழ்ந்த அமைதி, இருபக்கமும் கண்ணீர், கனத்த குரல் சரி செய்து கொண்டு அப்பா "அந்த சைக்கிளை சென்னைக்கு கொண்டு வந்துடுமா" என்றார்.*

*ஓர் உறவின் முடிவில் வேறொன்று தொடங்கியது!!*

*முற்றும்.*

**வெ.சிவசங்கரி**


Find your partner
Best of luck
Brahmin Kalyanam.com
BK MATRIMONY.com
An Auspicious Begining...
(Exclusive Portal for Brahmins)
பிராமணர்களுக்கு மட்டும்
REGISTER & GET
Brides/Grooms Profiles +
Free Horoscope Matching +
TWO YEARS Validity
One time Membership Fees ₹ 1000 only.
Astro Guidance By:
Thethiyur V J Raman
Aathmartha Jothidar
89397 02500
brahminkalyanam.com@gmail.com

## பசு - சர்வரோக நிவாரணி

தமிழகத்தின் நாட்டின மாடுகளின் வரிசையில் “பர்கூர் மலை மாடுகள்’’ முக்கியமானவை. தமிழகத்தின் பிரசித்திப்பெற்ற“காங்கேயம்’’ இனத்திற்கு பிறகு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட இனமாகும்.

மேற்கு தொடர்ச்சி மலையின் சத்தியமங்கலம் காடுகளின் கிழக்கே, போதை மலை, மாதேஸ்வரன் மலை, கொள்ளே கால் ஆகிய மலைப் பகுதிகளை ஒட்டிய காடு நிலப்பகுதிகளில் வசித்து வரும் “லிங்காயத்து’’ சமூக மக்களால் பெருமளவில் வளர்க்கப்பட்டு வருபவையாகும்.

பிரபலமான அந்தியூர் “குருநாத ஸ்வாமி’’ திருக்கோவில் தேர் திருவிழா சந்தைகளில் இந்தவகை மாடுகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுகிறது.

பெரும்பாலும் மலையை ஒட்டிய பகுதிகளில் வாழ்பவை, காடுகளில் பட்டி அமைத்து வளர்க்கப்படுவதால் “பட்டி மாடு’’ என்று அழைக்கப்படுகிறது. மேலும், இவை வெள்ளை நிறத்தோலில் ஆங்காங்கே சிவப்பு நிறத் திட்டுகளுடன் காணப்படுவதால் “செம்மறை’’ மாடுகள் என்றும் வெள்ளைத் திட்டுகளுடன் காணப்படும்.

மற்றஇன மாடுகளைவிட இவ்வகை மாடுகளின் திறன் அதிகமாகும். சுமார் நான்கு மாடுகள் சுமக்கும் பாரத்தை இவ்வகையின் ஒரே மாடு சுமந்து இழுக்கும்.

கரடுமுரடான நிலப்பகுதிகளை உழுவதில் இவை திறன்படைத்தவை. உழவுப்பணிக்கான சிறந்த இனமாகும். வறட்சியை தாங்கி வளரக்கூடியவை மற்றும் வாழ்பவை. சுமார் நான்கு நாட்கள் வரைகூட தண்ணீர் குடிக்காமல் இருக்கும். இவற்றின் கால்

குளம்புகள் மிகவும் உறுதியானதாகும். எனவே, இதை "கல் குளம்புகள்" என்றும் அழைப்பர்.

இதனால், சாலைகளில் பாரம் இழுத்துச்செல்லும் வண்டிகளில் பூட்டும் மாடுகளுக்கு மட்டுமே கால்களில் லாடம் கட்டப்படுகிறது.

விவசாயம் சார்ந்த பணிகளுக்கும் தொழு உரங்களுக்கும் மட்டுமே நோக்கமாக வளர்க்கப்படுவதால் தேவைக்கு மட்டும் பால் கறக்கப்பட்டு மீதியை அதன் கன்றுகளுக்கு விட்டு விடுகிறார்கள். வேளைக்கு இரண்டு லிட்டர் அளவில் கொடுக்கும் இப்பசுக்களின் பால் அதிக மருத்துவ குணத்தோடு நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவை.

பெரும்பாலும் மலைப்பகுதிகளை ஒட்டியே வசிக்கும் இந்தமாடுகள் அரசுகளின் கடும் சட்டதிட்டங்களாலும், கட்டுப்பாடுகளாலும் வனப்பகுதிக்குள் செல்ல முடியாதக் காரணங்களால் வளர்க்க முடியாத நிலையில் இறைச்சிக்காக விற்கப்படுவது பெரும் சோகமான நிகழ்வாகும். இதனால் இந்த இனமாடுகள் வெகுவாக குறைந்து தற்போது 4000 க்கும் குறைவாக அழிவை எதிர்கொண்டுள்ளது வருந்தத்தக்கதாகும்.

அடுத்ததாக "புங்கனூர் குட்டி இன மாடுகள்", உலகிலேயே மிகக் குறைந்த உயரம் கொண்டவைகள். மூன்றடி முதல் அதிகபட்சமாக நான்கடி வரை மட்டுமே வளர்பவை. இதன் எடை 115 கிலோ முதல் 200 கிலோ வரை இருக்கும்.

இந்திய நாட்டின மாடுகளில் 32 வகைகள் அடிப்படையாக கொண்டவை. இவற்றில் 4 மட்டுமே குட்டையானவை. கேரளாவின் வெச்சூர், மலநாடுகிட்டா, காசூர் (அ) புல்லன் கிட்டா

என்றவரிசையில் இந்த புங்கனூர் குட்டையும் ஒன்றாகும்.

இந்த ரக மாடுகள் ஆந்திராவின் சித்தூர் மாவட்டம், புங்கனூர் ஜமீன்தாரால் பெருமளவில் வளர்க்கப்பட்டு பிரபலப்படுத்தியதால் இவற்றுக்கு “புங்கனூர் குட்டை” என பெயர் வந்தது. இந்த இன மாடுகளுக்கு “சித்தூர் குட்டை” என்றொரு பெயரும் உண்டு.

ஆந்திராவின் சிறப்பான ஓங்கோல் இனத்திற்கு அடுத்ததான இவை, சித்தூர் மாவட்டம், குப்பம், சாந்திப்புரா, வி.கோட்டா, புங்கனூர் ஆகிய பகுதிகளில் அதிகளவில் காணப்படுபவையாகும்.

இவை பெரும்பாலும், வெள்ளை, பழுப்பு, கருப்பு, சாம்பல் ஆகிய நான்கு நிறங்களில் காணப்படுகின்றன.

“ஒரு நாளைக்கு 5 கிலோ அளவே தீவனம் போதுமானது. மிகக் குறைந்த தீனியே எடுத்துக் கொள்ளும் இவை வறட்சி காலங்களில் கிடைக்கும் தீனிக்கேற்ப வளரும் தன்மையுடையது.

சராசரியாக ஒரு நாளைக்கு 3 முதல் 5 லிட்டர் வரை கொடுக்கும் இதன் பால் சத்துக்கள் அதிகம் நிறைந்தவை. பொதுவாக பசும்பாலில் 3.5 லிருந்து 4 சதவிதம் வரை கொழுப்பு சத்து இருக்கும். ஆனால் இவ்வகை மாட்டுப்பாலில் எருமைப் பாலை போன்று சுமார் 8 சதவீதம் வரை கொழுப்புச் சத்துள்ளது.

அதே போல இப்பாலில் புரோட்டீன் சத்தும் கூடுதலாக கிடைப்பதால் இதன் சுவை தனித்துவமிக்கதாகும்.

இவ்வகை மாடுகள் மிகவும் சாதுவானது மற்றும் அழகானவை. வீடுகளில் வளர்பதற்கேற்றவை.

எல்லோராலும் எளிமையாக பராமரிக்க இயலும் மற்றஇன மாடுகளை போன்றேஉழவுப் பணிக்கு சிறப்பாக உதவுபவை.

மாடுகள் வீடுகளில் இருப்பதும், வளர்ப்பதும் ஒரு சமுதாய கௌரவமாக அக்காலங்களில் இருந்தன. மாறி வரும் நாகரிக உலகில் நமது பாரம்பரிய கௌரவத்தை விட்டு வெகுதூரம் நாம் விலகி நிற்கிறோம்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் ஆந்திராவின் பல பகுதிகளிலும் சித்தூர் பகுதி முழுவதும் நிறைந்து காணப்பட்ட இந்தவகை மாடுகள் தற்போது பெரும் அழிவை சந்தித்து வருகின்றன. இன்றைக்கு ஆந்திரா முழுவரும் தேடினாலும் 100 மாடுகள் இருப்பதே அபூர்வமாக உள்ளது.

நாட்டின மாடுகளை அழிக்க வேண்டும் என்னும் ஒரே நோக்கத்தில் அதன் இன அபிவிருத்தியை தடை செய்யும் பொருட்டு நாட்டின காளைகளை ஒழிக்க வேண்டும் என்னும் சிந்தனையின் செயலாகவே “ஜல்லிக்கட்டு’’ போன்றவீர விளையாட்டுகளுக்கு கொண்டு வந்த தடையாகும். அவர்களது உள்நோக்கத்தை சமூகம் அறிய செய்ய வேண்டும்.

**- ஆதிரையன்**


STAR Health Insurance
Personal & Caring
The Health Insurance Specialist



**மருத்துவ பாலிசி உங்களை**
**செல்வந்தராக்காது**
**ஆனால்**
**உங்கள் குடும்பத்தை**
**கடனாளியாக்காமல் பாதுகாக்கும்**
**மருத்துவமனை வரவேற்பறையில்**
**சிறிது நேரம் அமர்ந்து பாருங்கள்**



**ஏன் மருத்துவ பாலிசி**
**எடுக்க வேண்டும் என்பதற்கு**
**பதில் கிடைக்கும்.**



**S. Narayanan - 9360277372**

# தென் கயிலாயங்கள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

*சிவபெருமான் எழுந்தருளியிருப்பது திருக்கைலாயம்! அதற்கு திருநொடித்தான் மலை, வெள்ளிமலை, இமாச்சலம் எனப் பல பெயர்கள் உண்டு!*

*வடக்கே இருப்பதால் அதை வடகையிலை என்றும் கூறுவர்! தென்னாட்டிலும் சில சிறப்புக் காரணங்களால் கைலாயங்கள் எனப்பெருமை பெற்ற தலங்கள் உண்டு! வடகையிலை செல்ல இயலாதோர் பலர் தத்தமது ஊரில் கோவில் அமைத்து, இறைவனுக்குக் கைலாச நாதன் எனப் பெயர் அமைத்து வழிபட்டு வருகிறார்கள்! அவற்றுள் தக்ஷிண கைலாசம் அல்லது தென் கயிலாயங்கள் எனும் சிறப்புப் பெற்ற தலங்கள் மூன்று! அவை (1) திருக்காளத்தி (2) திருச்சிராப்பள்ளி (3) திருக்கோணமலை (இது இலங்கையில் உள்ளது)*

*இவை மூன்றும் எவ்வாறு தென் கையிலாயங்கள் எனப் பெற்றன என்பதைப் பார்ப்போமா!*

*ஒரு சமயம் திருக்கையிலையில் சிவபெருமானைத் தரிசிக்கும் பொருட்டு தேவர் பலரும் வந்து திருவாயிலில் காத்துக் கொண்டிருந்தனர்! அப்போது சிவ தரிசனம் காண ஆதிசேஷனும் அங்குவந்தார்!*

*அவரைப் பார்த்த தேவர்கள் அவரை வணங்கிப் புகழத் தொடங்கினர்!*

*"வாயுவான பஞ்சடைத்துத் திருமால் துயிலும் மலரணையே!*

*ஆயவிடமாம் யாக்கைஅமைத்து அரனார் அணியும் அரும்பணியே!*

*தாயார் உதரம் எனஉலகைத் தலையில் தமையாய்த் தரிப்போனே!*

*தூயபொருளே! உனக்குநிகர் ஊரோ உலகில் சொல்லாயே!”*

*என்று போற்றினர்! அதுகேட்டு நாணி அடக்கத்துடன் ஆதிசேஷன் அமர்ந்திருந்தார்! இவ்வாறு ஆதிசேஷனைப் பிறர் புகழ்வதுகண்டு பொறாமை கொண்ட வாயு ஆதிசேஷனை இகழ்ந்து பேசினான்! அதனால் ஆதிசேஷன் “வாயுவே! நீ என்னைவிட வலிமையுடையவன் என்றால் அதனைச் சோதித்துப் பார்ப்போம்! இக்கைலைமலையை நான் என் உடலாலும் படத்தாலும் மறைத்து நிற்கிறேன்! நீ உன் வலிமையை கொண்டு வீசி என்னை நெகிழச்செய் பார்க்கலாம்!” என்றார். இதனை வாயு ஏற்றான்! ஆதிசேஷன் கயிலைமலையைச் சுற்றி மூடிக்கொண்டான்! வாயு சண்ட மாருதமாய் வீசி ஆர்ப்பரித்தான்!*

*வாயு பல படியாக மோதி வீசினாலும், மலையும் சேஷனும் அஞ்சவில்லை! அசையவில்லை! அதனால் அயர்ந்த வாயு உயிர்க் கூட்டத்தை கொண்டு சென்று பாதாளத்தில் புகுந்தான்! உயிர்க் கூட்டங்கள் யாவும் ஓவியம் போன்று அசைவின்றி இருந்தன! அதைக்கண்ட சிவபெருமான் திருவுள்ளத்தில் கருணை கொண்டு ஆதிசேஷனை நோக்கி, ‘படத்தினால் நீ மறைத்திருக்கும் சிகரங்களைச் சிறிது தெரியச் செய்து நெகிழ்ச்சி பெறுக!” என்று கூறிட சேஷனும் அவ்வாறே செய்திட வாயுகாற்றை வீசிட கயிலைச் சிகரங்கள் மூன்றை வேருடன் பறித்துத் தென்திசையில் விழச்செய்தான்! அம்மூன்றும் தென் கயிலைகள் ஆயின!*

*“முன்னர் வீழ்ந்திடு சிகரி காளத்தியா மொழிவர்*
*பின்னர் வீழ்ந்தது திரிசிரா மலையெனும் பிறங்கல்*
*அன்னதன் பிறகு அமைந்தது கோணமா அசலல்*
*இன்ன மூன்றையும் தெக்கண கையிலையென் றிசைப்பர்!”* *(செவ்வந்திப்புராணம்)*

*தொடரும்...*



## ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

*ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:*

*திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.*

*தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு "ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்"* **(HINDU SEVA SAMAJAM TRUST)** *என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.:* **914010003352646;** *ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை,* **IFS CODE : UTIB0001566** *அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.*

**M. இராமகிருஷ்ணன்,** அறங்காவலர்
*71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,*
*அடையாறு, சென்னை - 600 020.*
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

## ஊரப்பாக்கம் - “பஞ்சாங்க படணம்”

*கடந்த 14.04.2022 வியாழன் அன்று “சுபகிருது” தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு பஞ்சாங்க படணம்” எனும் நிகழ்ச்சியானது ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி பகுதி வேதபாரதி அமைப்பின் சார்பாக நமது பொறுப்பாளர் திரு.* M. *கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மன்னை திரு.* R. *நாராயணசாமி அவர்கள் பஞ்சாங்கம் வாசித்து ஸ்ரீ சுபகிருது வருட பலன்களை மிக தெளிவாக விளக்கினார்கள். இதில் 25-க்கும் மேற்பட்டவர்கள் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். விழாவின் இறுதியில் சமஸ்கிருத பண்டிதர் திரு.* K.*ராமன் அவர்கள் நன்றியுரை நவில விழா இனிதே நிறைவுற்றது. இதில் கலந்து கொண்ட அனைவர்க்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*





# வேதபாரதி அமைப்பின் ஸ்லோக வகுப்புகளின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா மற்றும் ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம் 2022 துவக்க விழா

கடந்த 24.04.2022 ஞாயிறு அன்று சென்னை, துரைப்பாக்கம், ECR ரோடு, APL குளோபல் பள்ளி வளாகத்தில் நடைபெற்றவேதபாரதி அமைப்பின் ஸ்லோக வகுப்பின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா மற்றும் ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம் 2022 துவக்க விழாவும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் நெரூர் பூஜ்ய ஸ்ரீ வித்யா ஸங்கர சரஸ்வதி ஸ்வாமிகள் கலந்து கொண்டு அனைவருக்கும் ஆசிகள் வழங்கினார்.



விழாவின் துவக்க நிகழ்ச்சியாக நிறுவனர் திரு. T.R ராமநாதன் அவர்கள் தலைமையில் ஸ்வாமிகளுக்கு வேதகோஷம் முழங்க பூர்ண கும்ப மரியாதை செய்யப்பட்டு அனைத்து ஸ்தீரிகளும் தனது கரங்களால் ஏற்றப்பட்ட தீப ஜோதியுடன் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அஷ்டகத்துடன் சிறப்பான முறையில்

வரவேற்பு அளிக்கப்பட்டது. விழாவின் முதல் நிகழ்ச்சியாக மதுரை ஸ்ரீ முரளிதரன் அவர்கள் மற்றும் நம் வகுப்பில் முறையாக வேதம் பயின்றசில சிறுவர்களும் இணைந்து ஸ்வஸ்தி சூக்தம் செய்து வரவேற்புரை செய்தனர்.

வேதபாரதியின் ஸ்லோக வகுப்பின் மூலம் கற்றுக்கொடுத்த 'குரு அஷ்டகம்' மற்றும் 'ஸ்ரீ சங்கராச்சாரிய வர்யம்' ஸ்லோகத்தினை அனைத்து குழந்தைகளும் நமது பாரம்பரிய உடையில் வந்திருந்து ஒரு சேர நமஸ்காரங்கள் செய்து அதற்கான பாங்குடன் கூறியது அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. ஸ்வாமிகளும் மிகவும் மகிழ்ந்து அனைவருக்கும் ஆசிகள் வழங்கினார். இந்நிகழ்வு அரங்கமே அதிரும் சூழ்நிலையை ஏற்படுத்தியது. அதன் பின்பு ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம் துவக்க விழாவாக சங்கல்பத்துடன் முதலாவதாக ஸ்வாமிகளின் பொற்க்கரங்களால் நிறுவனர் திரு.ராமநாதன் அவர்களிடம் வழங்கப்பட்டு அதன்பின்பு பகுதி வாரியாக அந்தந்த பகுதியின் பொறுப்பாளர்களிடம் வழங்கப்பட்டு அனைவருக்கும் ஸ்வாமிகள் ஆசீர்வாதம் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து திரு. ராமநாதன் மற்றும் திரு.வெங்கட்ராமன் அவர்களும் வேதபாரதியின் செயல்பாடுகள் இதில் இணைந்துள்ளவர்களின் பங்களிப்பு குறித்தும் மிக தெளிவாகவும் சுருக்கமாகவும் விளக்கினார்கள். இந்த அமைப்பானது எவ்வித பதவியும் அல்லாது ஒரு குடும்பமாக இருந்து செயல்பட்டு வருகிறது என்றும் கூறின ர். இதனைத் தொடர்ந்து பேசிய ஸ்வாமிகள் ஸ்ரீ காயத்ரி ஜபத்தின் மகிமைகளையும் நாம் கடைபிடிக்க வேண்டிய நித்ய

கர்மா அனுஷ்டானங்களையும் அதன் வழி முறைகளையும் மிகவும் தெளிவாக எடுத்து உரைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து குழந்தைகளுக்கும் வேதபாரதி அமைப்பின் சார்பாக பதக்கங்கள், அதற்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசு பொருட்களும் திருமதி.நீலா முரளிதரன் கரங்களால் வழங்கப்பட்டது. மிகவும் நேர்த்தியாக கற்றுக்கொண்ட ஒரு சிலருக்கு நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டது. திருச்சி திரு.சந்திர சேகர் அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி அவ்வப்பொழுது சிறிய சிறிய விளையாட்டுக்கள் மூலம் குழந்தைகளை உற்சாகப்படுத்தி பரிசுகளும் வழங்கினார். திரு. கிருஷ்ண ஜெகநாதன் ஜி அவர்கள் வாழ்க்கை குறித்த சொற்பொழிவு நடத்தினார்கள். வேதபாரதி அமைப்பின் சார்பாக கடந்த வருடங்களில் பல்வேறு இடங்களிலும் நடைபெற்ற நிகழ்வுகள் சின்ன திரையின் மூலம் விளக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பாண்டிச்சேரி, ஊரப்பாக்கம் மற்றும் நங்கநல்லூர் பகுதிகளில் இருந்தும் பொறுப்பாளர்கள் வந்திருந்து விழாவினை சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து தாய்மார்களுக்கும் மாங்கல்ய பொருட்களுடன் கூடிய பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் 100 குழந்தைகள் உட்பட 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியானது அனைவர்க்கும் எல்லை இல்லா ஒரு ஆனந்தத்தை அளித்தது என்பதனை இறுதியில் நடைபெற்றஅவரவர் கருத்துக்கணிப்பின் மூலம் தெரிந்து கொண்டோம். அனைவருக்கும் அறு

சுவையுடன் கூடிய உணவு அன்றைய நாள் முழுவதும் வழங்கப்பட்டு திரு.வெங்கட்ராமன் அவர்கள் அவ்வப்போது நிகழ்ச்சியில் கூறியதை நிறைவேற்றும் விதமாக இந்நிகழ்வு நடந்தேறியது. "உண்ணலும் உனதே உயிர்த்தலும் உனதே" என்றதிரு.சந்திரசேகர் அவர்களின் நிறைவு பாடலுடன் விழா இனிதே நிறைவுற்றது.

ஓம் ஸாந்தி ஸாந்தி ஸாந்திகி.




## வாசகர் கடிதம்

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு நமஸ்காரங்கள்.
இம்மாத (ஏப்ரல் 2022) இதழைப்பார்த்த உடனேப்பிரித்துப் படிக்கத் தொடங்கினேன். ஸ்ரீ மத்ஸ்ய ஜயந்தி அட்டைப்படமும் விளக்கமும் பயன் தரும் வகையல் அமைந்திருந்தது. தொடர்ந்து ஒவ்வொரு அவதாரங்களை அட்டைப்படமாக விளக்கத்துடன் போடுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

• அன்புடன் **சுப.இராமநாதன்,** சேலையூர்.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில்
# கண் முன்
# உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் [illegible] கிரெடிட் கார்டு, வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். இந்தக் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்ப்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கெட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்திற்கோ / அலுவலகத்திற்கோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், எளியமான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7200075077 / 7399075078

Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th May 2022




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ் Ac

287,288, புளியமரத்தோட்டம், ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829 | 78, ஈஸ்வரன் கோவில் வீதி, ஞானவேல் பிள்ளையார் கோவில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.